# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.163/2018

**Deposition of Witness for : P.W.9**

**Name :** திரு.சங்கர்

**Father's Name :** ஞானலிங்கம்

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-6-2023.**

**முதல் விசாரணை -**

நான் வயலாத்தூர் கிராமம் பூர்வீகம். தற்போது காஞ்சிபுரத்தில் குடியிருக்கிறேன்.பானிபூரி வியாபாரம் செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. சுரேஷ் இறந்தது சம்பந்தமாக எனக்கு மறுநாள் போன் மூலம் தகவல் கிடைத்து, காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று போய் பார்த்தேன். அங்கு யாரும் இல்லாததால் நான் காவல்நிலையம்

வந்தேன். காவல்நிலையத்தில் என்னை கையொப்பம் போட சொன்னார்கள். போட்டேன்.

என்னிடம் காட்டப்படும் இரண்டு ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் கங்காதரனுடையது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆகும்.

என்னிடம் காட்டப்படும் கையொப்பங்கள் போட்ட ஆவணங்களில் உள்ள சங்கதிகளை தெரிந்துக்கொண்டபிறகு தான் கையொப்பம் போட்டேனா என்றால் தெரிந்துக்கொண்டு கையொப்பம் போடவில்லை. கையொப்பம் கேட்டதால் போட்டேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

சாட்சி திரும்ப ஆவணங்களை பார்த்து நான் ஒரு கையொப்பம் தான் போட்டேன். பார்வை மகசரில் உள்ளது மட்டும் தான் என் கையொப்பம். எனக்கு வெள்ளை தாளில் கையொப்பம் போட்டதாக ஞாபகம்.

என்னை போலிசார் விசாரிக்கும்போது 21-1-2017 பகல் 11.30 மணி அளவில் தூசி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் பதிவு செய்தபோதும் சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண், சாதாரண மண் மற்றும் இருசக்கர வாகனம், தலைக்கவசம் ஆகியவற்றை கைப்பற்றும்போது நானும் கங்காதரனும் உடன் இருந்து சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது

எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்னுடன் கையொப்பம் போட்ட கங்காதரனும் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் போட்டார் என்றால் சரி தான்.

**7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த சுரேஷ் என் நண்பர் என்பதால் தான் நான் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரி தான். இறந்த சுரேசிற்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் எப்போதோ ஒரு முறை குடிப்பார்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.